அன்புள்ள ... தலி

நான் நலம் நீங்கள் நலமாக உள்ளீர்களா ...?
நீங்கள் நலமாக வாழ்வதற்கு இறைவனை பிரார்த்திக்கின்றேன்.
எனது பெயர் சோதீதன் அனுசியா நான் கிளிநொச்சி
மாவட்டத்தில் புறகரி பிரதேச செயலகம் நல்லூர்
கிராம சேவையாளர் பிரிவில் முக்கொம்பன் 65 வீட்டுத்
திட்டத்தில் வசித்து வருகின்றேன். எனது குடும்பத்தில்
நானும் எனது மகளும். எனது மகள் முன்பள்ளியில்
கல்வி கற்று வருகின்றார். எனக்கு காணி, வீடு, மலசல
கூடம் இல்லை என்பதாலும் எனது மகளின் பாதுகாப்பு
கருதி எனது அம்மா அப்பாவுடன் வசித்து வருகின்றோம்
எனது அப்பாவும் மாற்றுத்திறனாளியாக வீட்டில்
தான் இருக்கிறார். அம்மாவும் ஒரு நோயாளி. நான்
ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிந்து வருகின்றேன்.
எனது வருமானத்தில் தான் வீட்டுச் செலவுகளையும்
பார்த்து எனது மகளையும், அம்மா அப்பாவையும்
பராமரித்து வருகின்றேன்.

எனது கணவர் என்னையும் எனது மகளையும்
கைவிட்டு சென்றமையினால் மனரீதியாகவும், சமூகரீதியாகவும்.
பல பிரச்சனைகளை சந்தித்து முகம் கொடுத்து தனிமையின்
மனநிலையை உணர்ந்தேன் உதாரணமாக எனக்கு
மற்றவர்களிடம் பேச படிக்க கூட விரும்பம் தையிரியம்
இல்லாதமாதிரி ஒரு உணர்வு என்னால் உரை முடிந்தது.
இந்த நேரத்தில் தான் சித்தி வந்து என்னுடன்
ஆறுதலாக இருப்பார். அந்த வேலையில் நான் கொஞ்சம்
ஆறுதலாக இருப்பேன்.

இதே வேளையில்தான் எமது கிராமத்தில்
பல சய உதவிக் குழுக்கள் இயங்கி வந்தன. எனது
சித்தி சொல்லுவார் சய உதவிக்குழுவில் சென்று இணைந்து
கொள் என்று ஆனால் நான் அலட்சியமாக எடுத்து
கொண்டேன். குழுவில் இணைவதற்கு தயக்கமாக
இருந்தது. சய உதவிக்குழு தொடர்பான விளக்கமும்

இல்லை எனக்கு. எனது சித்தியும் அயலவர்களும் வந்து சேமிப்பதையும், தாங்கள் எல்லோரும் ஒற்றுமையாக ஒவ்வொரு அங்கத்தவர்களின் பிறந்த நாள் நிகழ்வுகளுக்கு கேக் வெட்டி கொண்டாடு வதையும் என்னிடம் கூறினார்கள் இதனை கேக்கும் போது நான் வியப்புடன் பார்த்து இப்படி எல்லாம் குழுவில் நடக்குமா என கேட்பேன் இதையெல்லாம் பார்க்கும் போது எனக்கும் ஒரு விருப்பம் வந்தது. நானும் இணைவதற்கு அவர்களிடம் கேட்டு மல்லிகை சிய உதவிக்குழுவிடம் சென்று ஒரு அங்கத்தவராக இணைந்து கொண்டேன்.

தாங்கள் வழங்கிய ஆதரவுக்கு நன்றி கூறுகின்றேன். மல்லிகை சிய உதவிக்குழுவில் இணைந்து சேமித்து வருகின்றேன். இக்குழுவில் இணைந்ததின் உடாக நிறைய மாற்றங்களை உணர்ந்து கொள்கின்றேன். உதாரணமாக. எனது கணவரின் இழப்பால் மற்றவர்களுடன் கதைக்க தயக்கமாக இருந்த நான் எல்லோரிடமும் பழகி கதைப்பதற்கு வழிகாட்டி இருப்பதை உணர்கிறேன். எல்லோருடைய அன்பும் அவர்களுடைய ஆதரவும் தொடர்ந்து இக்குழுவில் இருக்க வேண்டும் என்பதை உணர்த்தியது. கிராம அலுவலிடம் சென்று என்றுடைய தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் எனக்கு தயக்கமாக. இருக்கும் இன்னொருவரின் உதவியை நாடுவன் தற்போது சிழற்சி முறை தலைமைத்துவம் எமது குழுவில் இருப்பதனால் தலைமை தாங்கும் ஆற்றலையும் கதைக்கும் ஆற்றலையும் வளர்த்து கொண்டதால். என்னால் முடியும் என உணர்ந்து இப்போது கிராம அலுவலிடம் சென்று எனது தேவைகளை நானே கதைத்து நிறைவேற்றி கொள்வேன்.

தாங்கள் வழங்கிய உதவிக்கு நன்றி கூறுகின்றேன். நான் ஆரம்பத்தில் சீந்தைக்கு போனால் எனது பணத்தை முழுமையாக செலவழித்து விட்டு

தான் வருவேன். இக்குழுவில் இணைந்ததன் பின்னர் ஏனையோர் சேமிப்பதை பார்த்து உணர்ந்து கொண்ட விடயம் நாளும் எனது வருமானத்தில். இருந்து முதலாய் 50k தான் சேமித்து வந்தேன் எனது சேமிப்பை அதிகரிக்க வேண்டும் என்று ஒவ்வொரு கிழமையும் 50k சேமிப்பை அதிகரித்து 200k 300k 500k ஆக அதிகரித்து சேமித்து வருகிறேன். உணைப்பாதுகாப்புக்காக 5000k உதவித்திட்டம் எனக்கு கிடைத்துள்ளது. இதனை கோழிவளர்பதற்கும், வீட்டுத் தோட்டம் அமைப்பதற்கும் பயன்படுத்தினேன். நாற்றுக் கன்றுகளும், பைக்கற்றுகளும், கோழியும் வாங்க பயன் படுத்தியுள்ளேன் இதன் மூலம் ஐந்து கோழியும் வாங்கி கூட்டெருக்கள் தயாரித்து நஞ்சற்ற மரக்கறி களும் வைத்து எனது உணவுத் தேவையை பூர்த்தி செய்ததோடு மேலதிகமாக வரும் முட்டையை விற்று எனது செலவுகளுக்கு பயன் படுத்தி சேமிப்பும் செய்து வந்தேன்.

எனக்கு எந்த வங்கியிலும் சொல்லக்கூடியவாறு சேமிப்பு இல்லை எமது சுய உதவிக்குழுவில் எனக்கு சொல்லக்கூடியவாறு 77600 சேமிப்பு தற்போது உள்ளது. இதனை நினைத்து நான் மிகவும் சந்தோசமாக உள்ளேன். ஆரம்பத்தில் அவசர தேவைக்காக பணம் தேவைப்பட்டால் எனது எனது உறவினர்களை, நண்பர்களை நாடுவேன் ஆனால் எல்லா நேரத்திலும் கிடைப்பதில்லை. அப்படியான நேரங்களில் மிகவும் கஸ்ரத்தை உணர்ந்துள்ளேன். ஆனால் இப்போது எனது உடனடி தேவைகளை பூர்த்தி செய்யவோ மற்றும் வாழ்வதற்கு தை மேம்படுத்தி எனது வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கு எனது மல்லிகை சுய உதவிக் குழு மிகவும் உதவியாக இருக்கின்றதை நினைத்து மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஆரம்பத்தில் கடன் தொகையாக எனது சேமிப்பு குழுவில் ஆறாத 5000 ₹ கடனாக எருத்து ஆண்டு கோழிகளும் வாங்கினேன். அக்கடனை செலுத்திய பின்னர் மறுபடியும் 20000 ₹ கடனாக பெற்று எனது மகளிற்கு சைக்கிள் வாங்கி கொடுத்தேன் எனது மகள் மிகவும் மகிழ்ச்சி அடைந்த அதனை கண்டு நானும் சந்தோசப்பட்டேன். அக்கடனையும் சில மாத தவணையில் மீளிழிப்பு செய்து மறுபடியும் 45000 ரூபாவாக கடனை பெற்று காணி வீடு திருத்தல் வேலை செய்தேன் அக்கடனையும் செலுத்தி இப்போது கடனாக 100000 ₹ பெற்று நகை அடைவு எருத்து அக்கடன் மிளிழிப்பு செய்து வருகின்றேன்.

இப்போது நான் யாரிடமும் பண உதவி கேட்டு செல்லாத அளவிற்கு எனது குழு என்னையும் எனது குடும்பத்தையும் வலுபடுத்தி எனக்கு தன்நம்பிக்கையை மேம்படுத்தி உள்ளது. மிகவும் சந்தோசமாக எனது வாழ்க்கை வாழ்வாதாத்தை மேம்படுத்தி வருகின்றேன். ~~இக்~~ குழுவில் நானும் ஒரு அங்கத்தவராக உள்ளமையை நினைத்து மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். தங்கல் ஆதரவுக்கு மிக்க நன்றி.

நன்றி

சோ. அனுசியா